விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 200 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 22 வெள்ளிக்கிழமை (07.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### யாழில் முச்சக்கரவண்டிகள்
## மீற்றர் பொருத்தப்பட்டு ஸ்ரிக்கர் ஒட்ட வேண்டும்
### பொலிஸார் விசேட அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள முச்சக்கரவண்டிகளிற்கு டக்சி மீற்றர் பொருத்தப்பட்டு, பொலிஸாரால் ஸ்ரிக்கர் ஒட்டப்படுதல் வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் யருஷ் தெரிவித்துள்ளார். 15

## முல்லையில் மனித புதைகுழி நேற்று 13 எச்சங்கள் மீட்பு
### நீதவான் முன்னிலையில் அகழ்வுப் பணிகள்



15

### லாஃப் எரிவாயு விலை குறைப்பு

(கொழும்பு)

லாஃப் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 12.5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 300 ரூபாயினால் குறைக்கப்பட்டு 15

### 300 ரூபாயினால்
## சிமெந்து விலை குறைப்பு

(கொழும்பு)

50 கிலோகிராம், உள்ளூர் உற்பத்தி சிமெந்து மூடை ஒன்றின் 15

### 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்துமாறு
# சர்வதேசம் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும்
### கனேடியத் தூதுவரிடம் தமிழ்த் தலைவர்கள்



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு சர்வதேசம் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும் என கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பணிப்பாளர் மரியா லூயிஸ் ஹனானிடம் தமிழ்த் தலைவர்கள் நேரில் வலியுறுத்தியுள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் தரத் தயாரா?
### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

தமிழர்களுக்கு தமிழீழம் தரத் தயாரா? என சிறீதரன் எம்.பி பாராளுமன்றில் வைத்து கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சிறீதரன் எம்.பி தமிழீழ வைப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த 15

## சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கடிதம்



15

## முல்லை அரச அதிபராக உமாமகேஸ்வரன் நியமனம்
### அமைச்சரவை அனுமதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அரசாங்க அதிபராக அ.உமாமகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது நியமனத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய உமாமகேஸ்வரன் வெற்றிடமாகவுள்ள முல் 15

## பொருளாதாரக் குற்றவாளிகள் நாட்டில் சுதந்திரமாக உள்ளனர்
### ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

எமது நாட்டில் மிகவும் சுதந்திரமாக இருக்கும் பொருளாதாரக் குற்றவாளிகள் தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான அநுரகுமார திசாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊழல் தடுப்பு சட்டமூலத்தின் இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு சிறுப்புலம் முருகனுக்கு இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் இன்று 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

இன்று காலை 8.55 மணிமுதல் முற்பகல் 10.15 மணிவரையான சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-7)

## சர்வதேசம்...

கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இச் சந்திப்பில்,

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழீழ விடுதலை இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் த.சித்தார்த்தன், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வெல்ஷ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி சின்னையா இரத்தின வடிவேல், கனேடியத் தூதரக அரசியல் அதிகாரி கோபிநாத் பொன்னுத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர். இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள ருவீட்டர் பதிவில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறையவே பேசுகின்றார். குறைவாகவே செய்கின்றார். அரசமைப்பு சட்டத்தில் உள்ள 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்து முதலில் தமது நேர்மையை பறைசாற்றும்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கனடா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ளடங்கிய சர்வதேச சமூகம் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். இதற்கு கனடா முன்முயற்சி எடுக்க வேண்டும். நாட்டை விட்டு வெளியேறிய தமிழர் பெருந் தொகையினருக்கு அடைக்கலம் கொடுத்துள்ள நாடு என்ற வகையில் கனடாவுக்கு இதற்கு உரிமை உள்ளது."

"13 ஆவது திருத்தம் தேசிய இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு அல்ல. இது எமக்குத் தெரியும். ஆனால், புதிய சட்டங்களை உருவாக்க முன், அரசமைப்பு சட்டத்தில் இன்று இருக்கும் 13 ஆவது திருத்த அதிகாரப் பகிர்வு சட்டத்தையும், 16 ஆவது திருத்த மொழியுரிமை சட்டத்தையும் அமுல் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டட்டும். அதை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும். இன்று நாம் இலங்கை அரசுடன் பேசி சலித்துப் போய் விட்டோம். அதேபோல் சர்வதேச சமூகத்திடமும் மீண்டும் இவற்றையே பேசி சலித்துப் போய் கொண்டிருக்கின்றோம்"

"பன்மைத்தன்மையை கொண்டாடுவது, அதிகாரப் பகிர்வு, 13ம் திருத்தம், மொழியுரிமை மற்றும் சமத்துவம், ஆகியவை பற்றி கனேடியத் தரப்புடன் பயன்தரும் விதத்தில் பேசப்பட்டன"

இந்நாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி பிரதிநிதிகள், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரப் பணிப்பாளர் நர்யகத்திடமும், இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடமும், இந்த நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனத் தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், இத்தகையை கொள்கையை முன்னெடுக்கும் எந்தவொரு கொழும்பு அரசையும் தாம் எதிர்த்துப் போராடுவோம் எனவும் கூறினர்.

தமது அபிலாஷைகள் தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்துவதைப் போன்று, சர்வதேச சமூகத்திடம் எடுத்துக் கூறுவதிலும் சலிப்படைந்து வருகின்றார்கள் என்று தமிழ்த் தலைவர்கள் இன்று கூறியதைத் தாம் புரிந்துகொள்வதாகவும், அது தமக்கு ஒரு செய்தி என்றும் கனேடியத் தரப்பினர் தம்மைச் சந்தித்த கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொருளாதார...

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொருளாதாரக் குற்றவாளிகள் எமது நாட்டில் மிகவும் சுதந்திரமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

எமது நாட்டில் சட்டம் பலமாகத்தான் உள்ளது. அதானால்தான் தேங்காய் திருடியவரும், இலஞ்சம் வாங்கிய கிராமசேவகரும், பொலிஸாரும்கூட சிறைக்குச் செல்கிறார்கள்.

ஆனால், இந்தச் சட்டத்தில் பாரிய குற்றங்களை இழைத்தவர்கள் சிக்குவதில்லை. அரசியல் பலத்தால் இதிலிருந்து இவர்கள் இலகுவாக தப்பித்துக் கொள்கிறார்கள்.

இந்த குழியிலிருந்து வெளியே வர, ஸ்திரமான மற்றும் நேர்மையான அரசியல் அதிகாரம் தேவைப்படுகிறது.

மத்திய வங்கியில் பிணைமுறி மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்தான் இன்று ஜனாதிபதியாக உள்ளார். நாட்டுக்குள் சட்டவிரோதமாக தங்கத்தை கடத்த முயன்றவர் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

இவ்வாறு எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தில்தான் பிரச்சினைக் காணப்படுகிறதே ஒழிய, சட்டத்தில் அல்ல.

குற்றவாளிகளை பாதுகாக்கும், குற்றவாளிகளுக்கு சுதந்திரம் அளிக்கும், குற்றவாளிகள் சட்டத்தை இயற்றும் ஒரு பாராளுமன்ற சம்பிரதாயம் முதலில் மாற்ற மடைய வேண்டும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## INVITATION FOR BIDS (IFB)

### KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

01. The Chairman, Local Authority, Procurement Committee (LAPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for Renovation Of Skanthapuram Library at Karachchi Pradeshiya Sabha Kilinochchi as described below.

| No | Contract No | Contract Name | Tentative Estimated Cost (Without Vat) (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/COU /001/2023 | Renovation Of Skanthapuram Library Karachchi Pradeshiya sabha Kilinochchi | 6.74 | C8,C7 and C6 (Building) | 90 Days |


02. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure. And Public Finance Circulars No 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of Building Construction for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
04. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.
05. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi**, (T.P No: 0212285761, Fax No: 021285690) and inspect the bidding documents at the address given below from **07th July 2023 until 20th July2023** during 09:00Hrs to 14:00Hrs on normal working days.
06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **07th July 2023** until from **20th July 2023** during **09:00** Hrs to **14:00** Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs.2,000.00)**. The method of payment will be by cash.
07. Bids shall be delivered in duplicate to the address below at **Secretary, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** on or before **14.00 Hrs on 20th July 2023** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
08. **Bids shall be valid up to (77 days) 21st September, 2023.** All bids shall be accompanied by a Bid-Security, of **Rs.68,000.00** Bid Security shall be valid up to **19th October, 2023.**
09. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **17th July 2023 at Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**Chairman,**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Kilinochchi.**

(C-6876)


## மரண அறிவித்தல்

பிறப்பு
15
-
10
-
1953



இறப்பு
05
-
07
-
2023

### வைத்திலிங்கம் ஜெயவீரசிங்கம் (வீரன்)

பளை, புலோப்பளையை பிறப்பிடமாகவும் உடுத்துறை மற்றும் புலோலி உபயகதிர்காமம் ஆகியவற்றினை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் ஜெயவீரசிங்கம் 2023.07.05 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நாகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் பாமதியின் அன்புக் கணவரும் நிர்மலன், மேனகா, காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைச்செல்வி, கபிலன், சசிகால ஆகியோரின் மாமனாரும் சாம்பவி, எழிலன், கவினயா, நிலக்ஷிகா, ரிசிகேசன், கோவர்த்தனன், லவன் ஆகியோரின் பேரனும் வேலையா, பரிமளம், பாலம்பிகை, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சற்குணம், ஆனந்தன், பாலசிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இந்துமதி மற்றும் ரேவதி, சந்திரசேகரம், யோகவதி, சிறீ கந்தசேகரம், அருந்ததி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2023.07.07 இன்று மாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடலானது ஆணைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரக்கோவில் வீதி,
உபயகதிர்காமம்,
புலோலி.

தகவல்:-
குடும்பத்தினர்
077 404 8877

(C-6879)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித புதைகுழி;

# விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குக

## சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிமன்றம் உத்தரவு

(மன்னார்)

**மன்னார் சதோச மனித புதைகுழி அகழ்வு தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கான கட்டளை ஒன்று மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கு B/232 நேற்று முன்தினம் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஏற்கனவே அழைக்கப்பட்ட 27 திணைக்களத்தின் பிரதிநிதிகள் சார்பில் பலர் மன்னார் நீதிவான் நீதி மன்றத்தில் பிரசன்னமாகி இருந்தனர்

நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட வினாக்களுக்கு அமைவாக இந்த புதை குழியில் ஏற்கனவே 376 மனித எச்சங்கள் எடுக்கப்பட்ட நிலையில் இதனை மீண்டும் அகழ்ந்து மிகுதி மனித எச்சங்களை உடனடியாக எடுக்கத் தேவையில்லை என்று ஒட்டுமொத்த தரப்பினரின் இணக்கப்பாட்டுக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் தற்போது இந்த மனிதப் புதைகுழியின் மனித எச்சங்கள் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆனால் காணாமல் போன தரப்பில் ஒட்டுமொத்த அறிக்கை என்ற அடிப்படையிலும் இது வரையில் நடந்தது என்ன? இனி தொடர்ந்து என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அவற்றை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் போன்ற விளக்கங்களை சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

ஏற்கனவே அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் நீதிமன்ற காப்பகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை தரம் பிரிப்பு செய்வதற்காக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது மனித எச்சங்கள் தனியாகவும் ஏனைய பொருட்கள் தனியாகவும் தரம் பிரிக்க வேண்டிய தேவை இருக்கிறது


அதற்கு பிற்பாடு தான் இதற்கான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருக்கின்றது இது தொடர்பாக வைத்தியர் மீண்டும் அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளை ஒன்றை ஆக்கியிருக்கிறது.

இதை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்றும் இதுவரை நடைபெற்ற அகழ் பணியில் கண்ட விடயங்கள் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாகவும் நீதிமன்றத்திற்கு வைத்தியர் ராஜபக்ஷ மற்றுமொரு அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டியிருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

அதுவரையான காலப்பகுதியில் குறித்த புதைகுழியை தாய் மையாகவும் அதே நேரம் முழு நேரம் பொலிஸார் முழுமையாக பாதுகாக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அதே நேரம் மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படுவதற்காக திகதியிடப்பட்டுள்ளது. (4-6-285)

# வவுனியாவில் தீ விபத்து



(நெளுக்குளம்)

வவுனியாவில் அமைந்துள்ள தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற வளாகத்தில் பரவிய தீயை நகரசபையின் தீயணைப்பு பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்ற தீவிபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற வளாகத்தில் இருந்த குப்பைகளுக்கு தீ மூட்டப்பட்ட போது குறித்த தீயானது மண்டபத்திலும் தீப்பிடித்து எரிந்திருந்தது.

தீ பரவுவதை அவதானித்த உத்தியோகத்தர்கள் உடனடியாக தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதிலும் அது சாத்தியப்படாத நிலையில் வவுனியா நகரசபையின் தீயணைப்பு படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு அவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (4-6-299)

# முழங்காவில் மதுபான சாலைக்கு 14 நாட்கள் தற்காலிக தடை

(கண்டாவளை)

கிளிநொச்சி. முழங்காவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மதுபான சாலைக்கு 14 நாட்கள் தற்காலிக இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட முழங்காவில் பிரதேசத்தில் முழங்காவில் விநாயகர் ஆலயம், பாடசாலை ஆசிரியர் விடுதி, பொது விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் மையப் பகுதியில் மதுபான சாலை அமைப்பதற்கு பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொதுத் தொல்லை ஏற்படுத்துவதாக தெரிவித்து பொலிஸாரால் வழக்கு தாக்கல் ஒன்று செய்யப்பட்டிருந்தது. இதனை அடுத்து நேற்று குறித்த வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பொது அமைப்புகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் சட்டத்தரணி மற்றும் எஸ்.விஜயராணி உள்ளிட்டோர் முன்னிலையாகி இருந்தனர்.

இதனை அடுத்து குறித்த பிரதேசத்தில் இருக்கின்ற பாடசாலை மற்றும் அருகில் இருக்கின்ற மிகப் பழமையான ஆலயம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இது அமைந்திருப்பதனால் இதற்கான தடை உத்தரவு ஒன்றினை பிறப்பிக்குமாறு விண்ணப்பம் செய்யப்பட்டதை அடுத்து மேற்படி விடயங்களை கருத்தில் எடுத்த மன்று 14 நாட்களுக்கு இடைக்கால தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளதுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி மறுதவணை இடப்பட்டுள்ளது. (4-6-315)

## பாலம் சேதம்

# ஆபத்தான பயணம் மேற்கொள்ளும் மக்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-9 வீதி இரணைமடுச் சந்தியினையும் பாரதி புரத்தினையும் இணைக்கும் செபஸ்தியார் வீதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவதனால் இதனூடாக போக்குவரத்து செய்ய முடியாது மிக ஆபத்தான பயணங்களை மேற் கொண்டு வருகின்றனர்.

பத்து லட்சம் ரூபாய் செலவில் கடந்த 2020 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பாலம் கடந்த இரண்டுவருடங்களுக்குள் உடைந்து சேதமடைந்துள்ளது.

இவ்வாறு குறித்த பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவது தொடர்பில் பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படும் பாலத்தின் ஊடாக தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம் மற்றும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை ஏற்பாட்டில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் பற்றிய கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி அருகிலுள்ள செல்வநாயகம் நினைவு கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

## சங்கீத பூசணம் நடராஜா கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சங்கீத பூசணம் வி.கே. நடராஜாவை கௌரவிக்கும் 85 ஆவது நட்சத்திர விழாவும் ஒலி, ஒளி பேழை வெளியீடும் நாளைய தினம் 9 ஆம் திகதி மாலை 4 மணிக்கு அளவெட்டி கும்பழாவளை திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிலையில் யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (4)

# மக்களின் சிறு சேமிப்பிலும் கை வைக்க தொடங்கியுள்ள அரசு

## சுமந்திரன் எம்.பி



(கிளிநொச்சி)

வாழ்நாள் முழுவதும் மக்கள் செய்த சிறு சேமிப்பை கூட அரைவாசியாக குறைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும் அதனை தான் வன்மையாக கண்டிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊடகவியலாளர் ஒருவர் நேற்று கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் மக்களுடைய இறையாண்மைக்கு எதிராக தேர்தல்கள் நடத்தாமல் தள்ளிப் போடுகின்ற விடயம் சட்ட பூர்வமானது அல்ல. அரசியல் அமைப்புக்கு முரணானது. அதனை எதிர்க்க நீதி மன்றை நாடவுள்ளோம்.


இரு தரப்பினரும் இவ்வளவு காலமும் செய்த ஊழலின் பிரதி பலன்தான் இன்று நாட்டினுடைய பொருளாதாரம் சீர்குலைந்து நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளது.

வாழ்நாள் முழுவதிலும் செய்த சேமிப்பை கூட அரைவாசியாக குறைக்கிற நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கம் மட்டும் அல்ல. இந்நாட்டில் வாழும் அனைவரும் அரசிற்கு எதிராக போராட வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டி வவுனியா மாணவிகள் சாதனை




2023 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டியில் வவுனியா மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

கண்டி பிலிமதலாவ மத்திய கல்லூரியில் கடந்த 1, 2, 3 ஆகிய தினங்களில் நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி கோசியா திருமேனன் 45 கிலோ எடை பிரிவில் 87 கிலோ எடை தூக்கி இரண்டாம் இடத்தையும், ஏ.கவியாழினி 80 கிலோ எடைப்பிரிவில் 65 கிலோ எடை தூக்கி நான்காம் இடத்தையும் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பாடசாலை அதிபர் சிஸ்டர் மரியசெய்சிசெபமாலை மற்றும் விளையாட்டு ஆசிரியர்கள் திருமதி V.நிரஞ்சலா, திருமதி J.d.ரெஜினோல்ட், திரு மதி S.அகிலா இவ் வெற்றிக்கு உதவியிருந்ததுடன் ஆசிரியர் ஞானஜீவன் இவர்களிற்கு பயிற்சியளித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# 100 ஆவது டெஸ்ட் ஸ்மித் புதிய சாதனை



இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலியா அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடிவருகிறது. முதல் 2 டெஸ்ட் போட்டிகளில் வென்று 2-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா அணி முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி லீட்சில் நேற்று ஆரம்பமாகியது.

இந்த டெஸ்ட் போட்டியில் விளையாடியதன் மூலம் அவுஸ்திரேலியா அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் ஸ்டீவ் ஸ்மித் புதிய சாதனை படைத்துள்ளார். அவர் தனது 100 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாட உள்ளார்.

கடந்த வாரம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 9,000 ரன்களை கடந்து அசத்தினார். 34 வயதான ஸ்மித், கடந்த 2010 இல் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதுவரை மொத்தம் 99 போட்டிகளில் விளையாடி உள்ள அவர் 9,113 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 32 சதங்கள் மற்றும் 37 அரை சதங்கள் அடங்கும். அதிகபட்சமாக ஒரே இன்னிங்ஸில் 239 ரன்கள் எடுத்துள்ளார். அவுஸ்திரேலியா அணிக்காக டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்கள் எடுத்த பட்ஸ்மேன்களில் 4 ஆவது இடத்தில் உள்ளார். (4)

# உலகக்கிண்ண தகுதிச் சுற்று சிம்பாப்வே அணி வெளியேற்றம்

ஆடவருக்கான ஒருநாள் உலகக்கிண்ண தகுதிச்சுற்று கிரிக்கெட் போட்டியின் சூப்பர் சிக்ஸில் ஸ்கொட்லாந்து அணியிடம் தோல்வியடைந்த சிம்பாப்வே அணி குறித்த தொடரில் இருந்து வெளியேறியுள்ளது.

இலங்கை அணி ஏற்கனவே இந்தியாவில் நடைபெறும் உலகக்கிண்ண தொடருக்கு 9 ஆவது அணியாக தகுதி பெற்றநிலையில், இறுதி இடத்திற்கு சிம்பாப்வே, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து அணிகளுக்கு இடையில் கடும்போட்டி நிலவியது.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் சிம்பாப்வே- ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுதாடிய ஸ்கொட்லாந்து 234 ஓட்டங்களை குவித்தது.




சிம்பாப்வேயின் நேர்த்தியான பந்து வீச்சால் ஸ்கொட்லாந்து அணியால் அதிக ஓட்டங்களை குவிக்க இயலவில்லை.

அந்த அணியின் மைக்கேல் லீஸ் அதிகபட்சமாக 48 ஓட்டங்களையும் பிராண்டன் மெக்கல்லம் 34 ஓட்டங்களையும் மேத்யூ கிராஸ் 38 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக வில்லியம்ஸ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.


இதனை தொடர்ந்து 235 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணி 41.1 ஓவரில் 203 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அவ்வணி சார்பாக ரியான் பர்ல் 83 ஓட்டங்களையும் வெஸ்லி மாதேவேர் 40 ஓட்டங்களையும் ஷிகந்தர் ரசா 34 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்காக போரடினர்.

இதன்காரணமாக 31 ஓட்டங்களினால் தோல்வியை சந்தித்த சிம்பாவே அணி இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ண தொடருக்கு தகுதியாகும் வாய்ப்பை இழந்தது.

ஏற்கனவே இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது குறிப்பிடத்தக்கது. (4)

# போட்டியின் நடுவே சுருண்டு விழுந்த வீரர்



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் களமிறங்கிய சீனா வீரர் போட்டியின் நடுவே மூச்சுத்திணறலுடன் திடீரென்று சுருண்டு விழுந்துள்ளார். உடனடியாக மருத்துவர்கள் அவரை சோதித்ததில், அவரது இதயத் துடிப்பு அதிகரித்திருந்ததை கண்டறிந்தனர்.

இதனையடுத்து அவர் மருத்துவர்களுடன் களத்தில் இருந்து வெளியேறினார். மருத்துவர்கள் மேற்கொண்ட பரிசோதனையில், இதயத் துடிப்பு அப்போது 187 என ஆபத்தான கட்டத்தில் இருந்துள்ளது.

மேலும், தமக்கிருக்கும் இந்த சிக்கல் தொடர்பில் அவர் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்துள்ளார் என்றே கூறப்படுகிறது. ஆட்டத்தின் இரண்டாவது செட் நடந்து கொண்டிருக்கும் போதே, அவர் சுருண்டு விழுந்துள்ளார்.

இதனையடுத்து, 3 நிமிடங்கள் ஓய்வு அறிவிக்கப்பட, 15 நிமிடங்கள் கடந்தும் வீரர் களத்திற்கு வரவில்லை. அவருக்கு எதிராக விளையாடி வந்த அமெரிக்க டென்னிஸ் நட்சத்திரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், அவர் மீண்டும் களத்திற்கு வந்தார். தொடர்ந்து விளையாடவும் செய்தார். ஆனால் 7-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் தோல்வியை தழுவினார். (4)

# டோனிக்கு இன்று பிறந்தநாள் கட் அவுட் வைத்த ரசிகர்கள்

2007 இருபது-20 உலகக்கிண்ணம்,. 2011, 50 ஓவர் உலகக் கிண்ணம், 2013 சம்பியன்ஸ் டிராபி என்று ஐ.சி.சி கிண்ணங்களையும் வென்ற ஒரே கப்டன் எம்.எஸ் டோனி. அண்மையில் நடந்து முடிந்த ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக 5 ஆவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றி கொடுத்துள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று 4 ஆண்டுகள் கடந்து பிறகு கூட இன்றும் டோனியின் மீதான அன்பு குறையவில்லை என்றே கூறலாம். அந்த அளவிற்கு ரசிகர்கள் டோனியை கொண்டாடி வருகிறார்கள். நடந்து முடிந்த ஐ.பி.எல் தொடரில் கூட சென்னை அணி விளையாடிய ஆட்டங்களில் எல்லாம் ரசிகர்கள் மஞ்சள் ஜெர்சி அணிந்து டோனியை வரவேற்றனர். அந்த அளவிற்கு டோனியின் மீது ரசிகர்கள் அன்பை பொழிந்தனர். இந்த நிலையில் டோனி இன்று தனது 42 ஆவது பிறந்த நாளை கொண்டாட உள்ளார். அவரது பிறந்த நாளை ரசிகர்கள் கொண்டாட ஆரம்பித்து விட்டனர்கள்.




ஐதராபாத்தில் டோனிக்கு 52 அடியில் முழு நீல கட் அவுட் வைத்து கொண்டாட்டத்தை தொடங்கியுள்ளார்கள். இது ரசிகர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய முத்திரை வெளியீடு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் நடவடிக்கைகளுக்கான 50 ரூபாய் பெறுமதியான புதிய முத்திரை வெளியீட்டு விழா சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பாராளுமன்ற நூலகத்தில் நடைபெற்றது.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகத்தினால் இந்த முத்திரை வெளியிடப்பட்டதுடன் இதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பலதரப்பட்ட அஞ்சல் தேவைகளை எளிதாக நிறைவேற்றிக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜ பக்ஷ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராம நாதன், அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி-5)



தமிழ் மக்களின் விடிவிற்காகத் தம்மை ஈகம் செய்த கரும்புலி மறவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிரான்ஸின் செவ்ரோன் பகுதியில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மாவீரர் பணிமனை மற்றும் கடற்புலிகளின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம் பெற்றுது.



## விவசாயத் துறைக்காக

# நான் வகுத்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(யாழ்ப்பாணம்)

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் விவசாயத்துறையை மேம்படுத்த வகுத்த திட்டங்களை தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர் குப்பிளான் பகுதியில் விவசாயிகளைச் சந்தித்து உரையாற்றிய போதே மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் எதிர்பார்த்ததை விட அதிக கோரிக்கைகளை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் என்னிடம் முன்வைத்துள்ளனர். குறிப்பாக விவசாய துறை சார்ந்து அதிக கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்தப் பிரச்சினைகள் இருக்கவில்லை. நீங்களும் என்னிடம் அப்போது விவசாயம் சார்ந்து எதுவும் கேட்கவில்லை.

இப்போது விவசாயிகளின் பெரிய கோரிக்கையாக நான் அமைத்த மொறக்காகந்த நீர்த் தேக்கத்தில் இருந்து இரணைமடு குளத்திற்கு நீரை எடுத்துவருமாறு கோருகின்றனர். நான் ஜனாதிபதியாக இருந்த வேளையில் இரணைமடு விவசாய குளத்தினை புனரமைப்புச் செய்து அதனை எனது கைகளால் திறந்து வைத்து விவசாய மக்களுக்கு உதவினேன். இரத்தினபுரி, கேகாலை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் மழை வீழ்ச்சி அதிகம் காணப்படுகிறது. ஆனால் அந்த நீரை தேக்க முடியாமல் மழை நீர் கடலைச் சென்றடைகின்றது.

1958 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க காலப்பகுதியில் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் ஊடாக மழை நீரை சேமித்து எவ்வாறு அதனை வடக்கு மாகாணத்திற்கு கொண்டு செல்லலாம் என பரிசோதனை நடத்தப்பட்டது.

நான் ஜனாதிபதியாக இருந்த போது அமைத்த மொறக்காகந்த நீர்த் தேக்கத்தில் இருந்து பொலநறுவை மாவட்டத்தில் உள்ள சகல குளங்களுக்கும், கந்தளாய் குளத்திற்கும் நீர் செல்கின்றது. அதன் பின்னர் அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களுக்கு வாய்க்கால் ஊடாக நீர் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆண்டு எனது பதவிக்காலம் நிறைவடைந்ததும் அந்த வாய்க்கால் அமைக்கும் பணிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

எனது காலப்பகுதியில் பொறியியலாளர் குழு ஒன்றினை அமைத்து வடக்கு மாகாணத்திற்கு விரைவாக நீரை கொண்டு செல்லும் திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு கூறியிருந்தேன். எனது பதவிக்காலம் முடிந்ததும் அந்தக் குழுவும் செயல் இழந்தது. என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (4-6-30)

# அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் அபிவிருத்திக்கான நிதி சேகரிப்பின் செயற்பாடாக அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு விற்பனையின் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

அந்தவகையில் முதலாம் பரிசு ஜே.கவிதா, இரண்டாம் பரிசு ரா.உதயயோகேஸ்வரி, மூன்றாம் பரிசு த.மகேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் பவந்தன, கலாவதி, பிரியங்கா, ரமேஸ், கெங்கா, கஜேந்திரா, முரளிதரன், விஸ்ணுகோபன், சுதர்சினி ஆகியோர் ஆறுதல் பரிசுகளையும் பெற்றுக் கொண்டனர். (4)

# இராசிபலன்

07.07.2023
ஆனி22, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.30 மணிவரை
சதயம் பின்னிரவு 4.03 மணிவரை

சுபநேரம் -5.58-7.28 மணிவரை
இராகுகாலம்-10.28-11.58 மணிவரை

சந்திராஷ்டமம்- பூசம்

வளவன்

**மேஷம்** — ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துளைப்பு கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு.

**கடகம்** — நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**துலாம்** — கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** — எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்** — சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** — மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** — சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பெரியோரை அனுசரித்துச் செல்வதால் நன்மையுண்டு.

**மிதுனம்** — தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கன்னி** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு** — வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** — உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆட்படுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

தான் அறிவாளி என்ற மமதையில் உள்ளவன் எதையும் கற்றுக் கொள்ள முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 22 இந்திய கடற்தொழிலாளர்களில் 21 பேருக்கு, 18 மாத சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்று , அதனை 5 வருட காலத்திற்கு ஒத்திவைத்துள்ளது.

மற்றைய கடற்தொழிலாளி 16 வயதிற்கு உட்பட்ட சிறுவனாக காணப்பட்டமையால் , சிறுவனின் எதிர்காலத்தை மன்று கருத்தில் கொண்டு , அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன் வைக்காது 10 ஆயிரம் ரூபாய் நன்னடத்தை பிணையில் விடுத்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்ட போது, கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி இந்திய கடற்தொழிலாளர்கள் 22 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மறுநாள் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டமையை அடுத்து , அவர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டு இருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது , 22 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன் போது 21 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்த நீதிவான் , மற்றையவருக்கு நன்னடத்தை பிணையில் விடுவித்தார். (4-6-33)

# எழுத்தாளர்களுக்கிடையிலான உரையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் .பல்கலைக்கழக மொழியியல் ஆங்கில துறையின் ஏற்பாட்டில் ஆங்கிலத்தில் எழுத்துத் துறையில் ஈடுபட்டிருக்கும் எழுத்தாளர்கள், கல்வியாயளர்கள் பங்கேற்கும் உரையாடல் நிகழ்வு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை, 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்திலே இடம் பெறவுள்ளது. (4-6)

# உலக சாதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தையிட்டியை பூர்வீகமாகவும்-தென்மராட்சி மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செ.திருச்செல்வம் என்பவரால் முன்னெடுக்கப்படவுள்ள சோழன் உலக சாதனை நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மட்டுவில்-சந்திரபுரம் ஐங்கரன் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

59வயதான நபர் இரண்டாயிரம் கிலோவிற்கும் அதிக எடை கொண்ட கனரக வாகனத்தினை தனது முகத்தாடியால் 500மீற்றர் தூரம் இழுத்து உலக சாதனை நிகழ்த்தப்படவுள்ளது.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவன இலங்கைக்கிளைத் தலைவர் யோ. யூட் நிமலன் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (4-6-30)



யாழ்ப்பாணம் - நயினாதீவில் அமைந்துள்ள நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் நயினாதீவுக்கு வந்து 50ஆவது ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு சர்வமதங்களின் பங்கேற்புடன் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் 6.45 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (4)

## வேலணை பிரதேச சபை - வேலணை
## வேலணை வங்களாவடிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023

வேலணை பிரதேச சபைக்கு் சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 10.07.2023 தொடக்கம் 24.07.2023 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி :-24.07.2023 (திங்கட்கிழமை) பிற்பகல் 02.00 மணிவரை

கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 24.07.2023 (திங்கட்கிழமை) பிற்பகல் 02.30 மணி

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை செயலாளர். வேலணை பிரதேச சபை. வங்களாவடிச் சந்தி. வேலணை எனும் முகவரிக்கு 24.07.2023 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் குறித்த காலப் பகுதிக்குள் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன் பண்ணை வீதி. யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும். மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
03. ஆகக் குறைந்த அடிப்படை கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு அவற்றில் சித்தி பெற்ற ஒரு கடை மட்டுமே வழங்கப்படும் அவ்வாறு வழங்கப்படும் ஒரு கடையும் அவரால் கோரப்பட்ட ஆகக் கூடுதலான கேள்வித் தொகை கொண்ட கடை மட்டுமே வழங்கப்படும். இவ் நிபந்தனையை மீறும் பட்சத்தில் அவரது அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு கேள்வி பெறுவதற்கு தகுதி அற்ற நபராக கணிக்கப்பட்டு இது தொடர்பான வைப்புத் தொகை எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
05. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
06. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
07. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
08. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை. இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு உரிய அனுமதியினைப் பெற்று நடாத்த அனுமதிக்கப்படுவர்.
09. கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள். மாற்றங்கள். சேர்ப்புகள் எதுவும் சபையின் எழுத்து மூல அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
10. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய திறப்புப் பணத்தினை (Key Money) முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
12. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்ட திறப்புப் பணத் தொகை (Key Money) எச் சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
13. பெற்றுக் கொள்ளும் கடைகளில் ஏற்படும் இயற்கை அனர்த்தம் தவிர்ந்த பாதிப்புகளுக்கு வாடகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
14. கடைகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தினை நிலுவைகளின்றி இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் தாங்களே செலுத்துதல் வேண்டும்.
15. திண்ம மற்றும் திரவ கழிவுகள் தொடர்பில் சபையின் நடைமுறைகளைப் பின்பற்றி உரிய முறையில் அவற்றினை அகற்றுதல் வேண்டும்.
16. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ. மதுபான வகைகளோ. அருவருப்பான பொருட்களோ. போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது அல்லது வைத்திருத்தல் தடை செய்யப்படுவதுடன் .கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
17. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் வாடகைத் தொகையின் 10 வீதத்தினை தண்டப் பணமாக சேர்த்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
18. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் வேலணை உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
19. மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த அடிப்படைக் கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| வங்களாவடிச் சந்தி.வேலணை | | | | |
| கடை இல 1 | 240 | 1.500.000.00 | 2000.00 | 150.000.00 |
| கடை இல 3 | 240 | 1.500.000.00 | 2000.00 | 150.000.00 |
| கடை இல 4 | 240 | 1.500.000.00 | 2000.00 | 150.000.00 |
| கடை இல 5 | 240 | 1.500.000.00 | 2000.00 | 150.000.00 |
| கடை இல 6 | 240 | 1.500.000.00 | 2000.00 | 150.000.00 |
| கடை இல 7 | 240 | 1.500.000.00 | 2000.00 | 150.000.00 |

குறிப்பு :- வேலணை பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டுமே கேள்வி கோரலில் பங்குபற்ற முடியும். (விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் போது கிராம சேவை உத்தியோகத்தரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றுடன் வருகை தருதல் வேண்டும் )

திரு. தியாகராசா தியாகச்சந்திரன்,
07.07.2023 செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை. (சி-6875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் தளர்த்தப்படவுள்ள இறக்குமதிக்கான தடைகள்

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இறக்குமதி தடைகள் மேலும் தளர்த்தப் படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.**

வெளிநாட்டு நாணய கையி ருப்பு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் அண்மையில் 286 வகையான பொருட்கள் மீதான இறக்குமதி தடை நீக்க ப்பட்டிருந்தது.

இதேவேளை தற்போது மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் அடிப்படையில் விரைவில் மேலும் சில பொருட்கள் மீதான இறக்குமதி தடையும் நீக் கப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டின் இறுதியில் 800இற்கும் அதிக மான பொருட்கள் மீதான இற க்குமதி தடை நீக்கப்படவுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மயக்க மருந்தினால் மற்றுமொரு பெண் மரணம்



(கொழும்பு)

தேசிய கண் மருத்துவ மனையில், சத்திரசிகிச்சைக் காக, மயக்க மருந்து செலு த்தப்பட்டமற்றுமொரு பெண் ஒருவரும் உயிரிழந்ததாக சுகாதார தொழில் வல்லுனர்க ளின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில், உயிரி ழந்த பெண்ணின் உறவின ர்களால் முறைப்பாடளிக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டு ள்ளார்.

குறித்த மரணம் மயக்க மருந்தினால் ஏற்பட்டதா என்பது தொடர்பில், உடன் விசாரணைநடத்தப்பட வேண் டும் என அவர் தெரிவித்து ள்ளார். (நி)

# தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பறவைகள்

(கொழும்பு)

3 பறவைகள் தாய்லா ந்தில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் தாய் லாந்து இடையிலான வில ங்குகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் இந்த பறவைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மலேஷியாவின் கோலா லம்பூர் நகரில் இருந்து மலே ஷிய விமான சேவையின் எம்.எச். 179 இலக்க விமா னத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

60 கிலோகிராம் எடை மற்றும் 5 அடி உயரம் வள ரும் இந்த பறவை இனம் உலகின் மிக ஆபத்தான பறவை இனமாக காண ப்படுகின்றது.

இந்த 3 பறவைகளும் தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு கொண்டு செல் லப்பட்டுள்ளது.

இதனிடையே, விலங் குகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் இலங்கையில் இருந்து சில வகையான விலங்குக ளும் பாம்புகளும் தாய்லா ந்திற்கு அனுப்பப்படவுள் ளன. (நி-5)

# லொறி மோதி தம்பதியர் உயிரிழப்பு

## பாடசாலையில் இருந்து மகளை அழைக்க சென்ற போது சோகம்

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியின் படகமுவ பகுதியில் மோட்டார் சைக்கிள் மீது லொறி மோதியதில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளதாக தொரடியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

அமில புஷ்பசிறி மற்றும் அவரது மனைவி சத்துரராணி குமாரி ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. குருநாகல் கட்டுவன மஹிந்த கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்வி கற்கும் தமது ஒரே மகளை அழைத்துச் செல்வதற்காகச் சென்றபோதே தம்பதியினர் இந்த விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.அதிவேகமாக வந்த லொறி ஒன்றே வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் குறித்த மோட்டார் சைக்கிளை மோதியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 350 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 650 | 800 |
| தக்காளி | 450 | 350 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 240 | 200 | 300 |
| கோவா | 320 | 300 | 300 | 320 |
| கரட் | 400 | 520 | 500 | 600 |
| பூசணி | 140 | 100 | 100 | 140 |
| புடோல் | 200 | 140 | 180 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 130 | 160 |
| பாகற்காய் | 600 | 400 | 400 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 120 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 420 | 320 | 300 | 350 |
| பீற்றூட் | 420 | 300 | 350 | 450 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | 240 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 600 |
| முள்ளங்கி | 160 | 130 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 170 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | — | 150 |


# எனது 32 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

## இன்று சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகரின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்



*என் அன்பு உள்ளங்களே!*

சுழிபுரம்- பறாளையில் பள்ளி கொண்டு நம் நாட்டுப் பிரச்சி னையைத் தீர்த்தருளும் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் கும்பாபிஷேகப் பெருவிழா. இங்கே தமிழ் மக்களின் கொடிய கர்மாக்களைப் போக்க விஷேடயாக பூசைகள் வழிபாடுகள் நடை பெற்றன.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஒரு நிமிடம் "ஈசுர விநாயகர்" என்ற அவரின் திருநாமத்தை நினையுங்கள்.

இக் கும்பாபிஷேகத்தின் பலாபலன் தமிழ் மக்களின் கொடிய கர்மாக்களைப் போக்கி அபிலாசைகளை நிறைவேற்றி நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் கிடைக்கப் பெற்று இன்பமாய் வாழ கைமேற்பலன் நிச்சயம் கிடைக்கும்.

இக் கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழாவின் மூலம் நாட்டு அனைத்து மக்களுக்கும் அமைதி, சமாதானம் ஏற்பட ஈசுர விநாயகரின் பரிபூரண கிருபா கடாக்ஷம் கிடைப்பதாக.

கும்பாபிஷேக பிரதம குரு

"வித்தியாசாகரம்" சிவஸ்ரீ சபாவாசுதேவக்குருக்கள்

(ஸ்ரீசரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோயில், சண்டிலிப்பாய்) (16211)

சோழியூரான்- பிறைசூடிக்குரு.

(ஆன்மீக வாதியும் சந்ததிப்பூசகரும் பரிபாலகரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 160

### சுற்றுச்சூழலை சுத்தமாக பேணுங்கள்



நான் மரக்கறி வாங்க கடைக்கு சென்றேன்.. அங்க எனக்கு முன் ஒரு பெண் மரக்கறி வாங்கிக் கொண்டிருந்தார்....

சில மரக்கறிகளை வாங்கினார்.. கடையில் இருப்பவர் விலை சொன்னதும் பணத்தை எடுத்து இருமுறை எண்ணி கொடுத்தார்....

கடைக்காரர் பொலிதீன் பை எடுத்தார்...பெண் வேண்டாம்பா எங்கிட்டயே இருக்கு...

கடைக்காரர்: பழைய பொலீத்தின் பைய ஏன் தூக்கிட்டு திரியுறிங்க?.....

உங்களுக்கு கொடுக்கிற ஒரு பையில் நான் கொற்ஞ்சிடமாட்டேன்...

பெண்: நீ பெரிய கர்ணபிரபுன்னு எனக்கு தெரியும்...இந்த கருமத்தால (பொலிதீன்) வீடு குப்பையாச்சி... ஊரு குப்பையாச்சி... நாடு குப்பையாச்சி... இந்த உலகமே குப்பையாச்சி... பொலித்தீன மண்ணுல போட்டா மண் கெடுது...

பொலித்தீன் எரிச்சிவிட்டா காத்து கெடுது...

துணி பை இலவசமா கிடைக்குது.. பயன்படுத்த சுலபமா இருக்கு... அதுக்காக ஏன் நல்லா இருக்குறத குப்பைல போடனும்.... இந்த பை எவ்வளவு காலம் உழைக்குதோ அதுவரைக்கும் பாவிச்சிட்டு இனி முடியாத என்ற நிலை வரும்போது தூக்கி குப்பைல போட்டுருவேன்.... இப்படி செஞ்சாலே கொட்டுற முக்காவாசி குப்பைங்க குறைஞ்சிடும்...

பயன்படுத்திய பொருளை எடுத்துவச்சி திரும்ப பயன்படுத்துவதில் என்ன வெக்கம் ம்?...(முனுமுனுத்து கொண்டே சென்றார்...)

சுண்டு விரலில் ஊசியால் குத்தியதுபோல் சுள் என்று இதயத்தில் ஒரு வலி.... படித்தவர்கள்..... பட்டத்துக்கு மேல் பட்டம் வாங்கி குவித்தவர்கள்.... நுனிநாக்கில் ஆங்கிலம் பேசுபவர்கள்... அனைத்து மொழி செய்தி தாளையும் தினந்தோறும் தவராமல் படித்து பொது அறிவை வளர்ப்பவர்கள்.... இதில் எத்தனை பேர் இதை யோசிச்சிருப்பாங்க..... எத்தனை பேர் பின் பற்றுவாங்க.....பயன்படக்கூடிய பொருள் குப்பைக்கு போவதை தடுத்தாலே... சுற்றுச்சூழல் பிரச்சனை பாதியாக குறையும் என்று அவருக்கு தெரிந்திருக்கிறது....5 நிமிடத்திற்கு முன் சாதாரண பெண்ணாக தெரிந்த அவர்... 5 நிமிடத்திற்கு பிறகு மாமனிதராக தெரிந்தார்..

அன்றிலிருந்து நானும் அதனை பின்பற்ற முயலுகிறேன்...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்க உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# இஸ்ரேலில் அரசுக்கு எதிராக தொ...

## ஆர்ப்பாட்டத்தை கலைக்க தி...

(எருசலேம்)

**இஸ்ரேல் நாட்டின் தலைநகர் டெல் அவிவில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தண்ணீர் பாய்ச்சி அடித்து விரட்டியுள்ளனர்.**

அதாவது, இஸ்ரேல் அரசாங்கத்தின் நீதித்துறையில் மாற்றம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டில் பல மாதங்களாக போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு 20 ஆயிரத்திற்கும் அதிகளவான மக்கள் டெல் அவிவ் நகரில் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் பொழுது, பிரதான நெடுஞ்சாலையை முற்றுகையிட்டு தீ மூட்டியுமுள்ளனர்.

இதனால், அந்த போராட்டத்தினை கட்டுக்குள் கொண்டுவர

## கனடாவில் கடும் வெப்பம் நெருக்கடியில் மக்கள்

(ஒட்டாவா)

கனடாவின் ரொரன்டோ மற்றும் ஹாமில்டன் ஆகிய பகுதிகளில் அதிகளவில் வெப்பநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் விளைவாக மக்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும் ஒட்டாவா மற்றும் ஒன்றாரியோ உள்ளிட்ட இடங்களிலும் வெப்பநிலை அதிகரிப்பு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒரு வார காலத்திற்கு கூடுதல் வெப்பநிலையை எதிர்பார்க்க முடியும் என கனடா சுற்றாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தகைய வெப்பநிலையானது 20 முதல் 35 பாகை செல்சியஸ் வரையில் உயர்வடையும் சாத்தியங்கள் காணப்படும் எனவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## தந்தையின் து... தம்பியை ...

(வோஷிங்டன்)

அமெரிக்காவில், தந்தையின் துப்பாக்கியை வைத்து தம்பியை அண்ணன் சுட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஒக்லஹோமா மாநிலத்தில் உள்ள வால்மார்ட் கடைக்கு தாயுடன் இரண்டு மகன்கள் சென்றிருந்தனர்.

அப்போது அவர்களுடைய தாய், கடைக்குள் பொருள்கள் வாங்க சென்றிருந்தார்.

குறித்த அந்த சமயத்தில் ஒரு

## மெக்சிகோவில் பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்து; 27 பேர் உயிரிழப்...



(மெக்சிக்கோ)

மெக்சிகோவில், தெற்கு மாநிலமான ஓசாகாவில், மலைப்பாதையில் இருந்து பயணிகள் பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் 17 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இதில் சுமார் 27 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு வரு...கின்றனர். அப்போது, செங்...குத்தான குன்றின் அடியி...பகுதியில் வாகனத்தின் சிதைந்த பாகங்கள் கிடப்ப...தாக தெரிவித்துள்ளனர்.

"முதற்கட்ட எண்ண...க்கையின்படி, 27 பேர் இறந்தனர் மற்றும் 17 காய...மடைந்தவர்கள் மருத்துவ கவனிப்புக்காக பிராந்திய...த்தில் உள்ள வெவ்வேறு மருத்துவமனைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்" என்று ஓசாகா மாநில வழக்கறிஞர் பெர்னார்டோ ரோட்ரிக்ஸ் அலமில்லா தெரிவித்தார்.

மேலும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரி...வித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## தொடரும் போராட்டம்
## திணறிய பொலிஸார்



முடியாது திணறிய பொலிஸார் தண்ணீரை பாய்ச்சி அடித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை விரட்டி அடித்துள்ளனர். (நி-5)

## தென்னாபிரிக்காவில் நச்சுவாயு கசிவு குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழப்பு

(பிறிப்டோறியா)

தென்னாபிரிக்காவில் நச்சு வாயு கசிந்ததன் காரணமாக மூன்று குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோகன்னஸ்பர்க்கின் கிழக்கு புறநகரில் உள்ள போக்ஸ்பர்க் நகரில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஜோகன்னஸ்பர்க்கைச் சுற்றியுள்ள பகுதியில் தங்கம் அதிகளவு கிடைப்பதால் அங்கு சட்டவிரோத சுரங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையில், சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபடும்போது இவ்வாறான வாயுக்கள் வெளியேறியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



இருப்பினும் நச்சுவாயு தாக்கத்தினால் உயிரிழந்தவர்களின் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை எனக் கூறும் அதிகாரிகள் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும், மீட்பு குழுவினர் குறித்த பகுதியை சென்றடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

## துப்பாக்கியை வைத்து சுட்ட அண்ணன்

சிறுவன் காருக்குள் இருக்கும் துப்பாக்கியை பார்த்துள்ளான். பின்பு, அந்த 14 வயது சிறுவன் அதனை தவறுதலாக அழுத்திய போது தனது தம்பியை சுட்டுவிட்டான்.

துப்பாக்கி சத்தம் கேட்டதும் அருகில் இருந்தவர்கள் அவசர உதவி எண் 911 யை அழைத்து தகவலை தெரிவித்தனர். பின்பு, பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து சிறுவனுக்கு முதலுதவி அளித்தனர்.

தோட்டா பாய்ந்த இடத்திலை இரத்தம் வெளியேறியதால் அதனை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மேலும் சிறுவனை ஆம்புலன்ஸ் மூலம் ஓக்லஹோமா பல்கலைக்கழக சிகிச்சை மையத்திற்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தனர். தற்போது சிறுவன் நலமாக உள்ளதாகவும், அறுவை சிகிச்சை செய்யவிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (நி-5)

## அமெரிக்காவில் பெண்ணை கடித்து கொன்ற பின் பெண்ணின் உடலை பாதுகாத்து வந்த முதலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தெற்கு கரோலினாவில் உள்ள ஹில்டன் ஹெட் தீவில் வசித்து வந்த 69 வயதுப் பெண் கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது செல்லப்பிராணியுடன் ஒரு கோல்ப் மைதானத்தின் எல்லையில் உள்ள குளத்தின் அருகே நடைபயிற்சி மேற்கொண்டார்.

அப்போது, அங்கிருந்த முதலை ஒன்று பெண்ணை கடித்துக் கொன்று இழுத்து சென்றது. இதுதொடர்பாக கிடைத்த புகாரை அடுத்து பொலிஸார் பெண்ணை தேடி வந்தனர்.

இந்நிலையில் அந்த குளத்தின் அருகே பெண்ணின் சடலம் இருப்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர். முதலை பெண்ணின் உடலைப் பாதுகாத்து மீட்க வருபவர்களைத் திருப்பியனுப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையில்,

மீட்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு முதலை தோன்றி, அவசர கால முயற்சிகளுக்கு இடையூறு விளைவித்து பெண்ணைக் காத்துக் கொண்டிருந்தது" என்று தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்திற்குள் இது இரண்டாவது அபாயகரமான முதலை தாக்குதல் என்று கூறப்படுகிறது. (நி-5)

## இங்கிலாந்தில் கம்பளிப் புழுக்களால் பொதுமக்கள் கடும் அவதி



(லண்டன்)

இங்கிலாந்தில் கம்பளிப் புழுக்கள் வேகமாகப் பரவி வரும் நிலையில் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

டெர்பிஷையர் என்ற இடத்தில் கருவேல மரங்களில் கூட்டம் கூட்டமாக வாழும் இந்த புழுக்களால் மனிதர்களுக்கு உடலில் தடிப்பு, அரிப்பு, வாந்தி, சுவாசப்பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கம்பளிப் புழுக்களில் மேல் உள்ள ரோமங்களில் தாமென்டோபோயின் என்ற நச்சு உள்ளதால் அவை காற்றில் பறந்து மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த வகை புழுக்கள் அதிகம் காணும் மரங்களுக்கு சிகிச்சை அளிக்கவும் புழுக்கள் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக தாவர சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர். (நி-5)

## ஒரே நாளில் பதிவான 1,600 நிலநடுக்கங்கள் ஐஸ்லாந்தில் எரிமலை வெடிக்கும் அபாயம்

### வானிலை மையம் எச்சரிக்கை

(ஐஸ்லாந்து)

ஒரே நாளில் 1,600 நில அதிர்வுகள் ஏற்பட்டமை மக்களை அச்சமடைய வைத்துள்ளது.

இந்த நில அதிர்வானது ஐஸ்லாந்தில் தலைநகரான ரெய்க்ஜாவிக்கை சுற்றியுள்ள பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்டதாக அந்நாட்டு வானிலை மையம் தெரிவித்துள்ளதுடன், இதனால் எரிமலை எப்பொழுது வேண்டுமென்றாலும் வெடிக்கலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதாவது, 1600 நில அதிர்வுகள் அளவிடப்பட்ட நிலையில் அது தலைநகர் பகுதியில் மிகப்பெரிய அளவில் உணரப்பட்டதாகவும் அது [illegible] டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன், ஏற்பட்ட நில அதிர்வில் நான்கு அதிர்வுகள் 4 ரிக்டர் அளவிற்கு மேல் இருந்துள்ளது. இதனால் லேசான நிலநடுக்கம் என கருத்தப்பட்டுள்ள போதிலும் விமானம் பறப்பதற்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிமலை வெடிப்பதற்கான அறிகுறிகள் இதுவரையிலும் தென்படவில்லை என்றாலும் ஒன்றிரண்டு நாட்களில் வெடிப்பதற்காக வாய்ப்பு அதிகமாகவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த நாட்டில் கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரெய்க்ஜாவிக்கில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஃபக்ராடால்ஸ்ஃப்ஜால் மலை அருகே எரிமலை வெடிப்பு ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

ல் பு

வரு செங் அடிப் தின் டப்ப ர். ணி பேர் காய துவ ந்திய வறு க்கு னர்" நில டோ ல்லா கான விசா டுள் தெரி -5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித மக்காவிற்கு சென்ற இரு இலங்கையர்கள்

(கொழும்பு)

மக்கா யாத்திரைக்குச் சென்ற இரு இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதோடு மற்றையவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிகப்பட்டுள்ளது. (நி-5)

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரம்

# வைப்பிலிடப்பட்டுள்ள பணம் தொடர்பில் மக்களின் அச்சத்தை போக்க வேண்டும்

## பொருளாதார நிபுணர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்திற்கு என்ன நடக்கும் என பொதுமக்கள் மத்தியில் காணப்படும் அச்சங்களை போக்குவதற்கான நடவடிக்கைகள் அவசியம் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்திற்கு என்ன நடக்குமோ என்ற அச்சம் தேவையற்றது என சிரேஸ்ட பொருளாதாரநிபுணரும் வெரிட்டே ஆராய்ச்சி நிறுவகத்தின் நிறைவேற்று இயக்குநருமான கலாநிதி நிசான் டி மெல் தெரிவித்துள்ளார்.

வங்கியில் உள்ள வைப்புகளிற்கு பாதிப்பு என்ற அச்சத்திற்கு தீர்வை காணவேண்டும் என தெரிவித்துள்ள அவர் வங்கியின்வாடிக்கையாளர்கள் மத்தியில் பதற்றநிலை ஏற்பட்டு மக்கள் தங்கள் பணத்தை மீளபெற்றுக்கொள்ள முயலும் சூழ்நிலை உருவாக அனுமதிக்க கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான பதற்றநிலையேற்பட்டால் அது வங்கிகளை பாதிக்கும் அவ்வேளையே வங்கிகள் வீழ்ச்சியடையும் என குறிப்பிட்டுள்ள அவர் அவ்வாறான அதிர்ச்சி சூழ்நிலை உருவாகும்போது வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை எவராலும் தடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை உடனடியாக பெற்றுக்கொள்ள முயல்வார்கள் அந்த நிலைமையை கையாள்வது கடினம், என தெரிவித்துள்ள நிசான்டிமெல் அவ்வாறான சூழ்நிலையை நாங்கள் உருவாக்கமலிருப்பது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள பணம் பாதுகாப்பானது இல்லை என்ற கரிசனை அர்த்தமற்றது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் வைப்புகள் எப்போதும் பாதுகாப்பானவை அரசாங்கம் ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளை மீறினால் மாத்திரமே அவற்றிற்கு ஆபத்து ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

# குறையப் போகும் வட்டி வீதங்கள் மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி வீதம் (SLFR) ஆகியவற்றைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய வங்கியின் நாணயச் சபைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி நிலையான வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி வீதங்களை 200 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 11 சதவீதம் மற்றும் 12 சதவீதமாகக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டரீதி யான கையிருப்பு விகிதத்தை நிலவும் 4.00% அளவிலேயே பேணுவதற்கு நாணயச் சபை தீர்மானித்துள்ளது. (நி-5)

# கஞ்சா பயிர்ச்செய்கை திட்டம் அடுத்த மாதம் முதல் ஆரம்பம்



(கொழும்பு)

இலங்கையில் கஞ்சா பயிர்ச செய்கை திட்டம் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுநாயக்கவிலுள்ள முதலீட்டுச் சபை வலயத்துள் மேற்படி கஞ்சா வளர்ப்பு செயற்றிட்டம் அடுத்த மாதம் முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 11 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர் எனவும் இந்த செயற்றிட்டத்தால் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் 4 முதல் 5 பில்லியன் ரூபா வருமானம் ஈட்ட முடியும்.

மேலும் இச்செயற்றிட்டத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள அதேவேளை, இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு சுமார் 11 முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர்.

கஞ்சா பயிர்ச்செய்கைக்கும் அதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கும் அவர்களே பொறுப்பாவார்கள்.

இவ் உற்பத்திகள் நாட்டின் வருமானத்துக்கும் பங்களிக்கும். கடந்த கால முயற்சியை தோற்கடித்தது போன்று இந்த செயற்றிட்டத்தை தோற்கடிக்க முடியாது. அதற்கு அனுமதிக் கமாட்டேன் எனவும் தெரிவித்துளார். (நி-5)

# செந்தில் தொண்டமான் உதயநிதி ஸ்டாலின் சந்திப்பு



(சென்னை)

தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும் தென்னிந்திய திரைப்பட நடிகருமான உதயநிதி ஸ்டாலினுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த இந்த கலந்துரையாடல் இலங்கை நாட்டின் பொருளாதாரம் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து பேசப்பட்டது.

இலங்கை தமிழ்நாட்டுக்கு மிக நெருக்கமான அயல் நாடாக இருப்பதால், இருதரப்பு உறவு பல நூற்றாண்டுகளாக தொடர்வதாகவும், தமிழ்நாட்டின் ஆதரவு இலங்கை மக்களால் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்படுவதாகவும் செந்தில் தொண்டமான் உதயநிதிஸ்டாலினிடம் தெரிவித்தார்.

மேலும் கலந்துரையாடல் குறித்து செந்தில் தொண்டமான் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (நி-5)

# அரசியல் கைதிகள் விவகாரத்தில் அநீதியான சட்டமே உள்ளது

## கஜேந்திரகுமார் எம்.பி

(கொழும்பு)

அரசியல் கைதிகள் விவகாரத்தில் அநீதியான சட்டமே எமது நாட்டில் பின்பற்றப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக தடுத்து வைக் கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று கடந்த அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போது 19 பேர் இந்தச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அனைவரது கருத்தாகவும் உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவிற்கு விஜயம் செய்திருந்தபோது, அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15



வருடங்களாகிவிட்டன. ஏனைய நாடுகளில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கைதிகள் விடுவிக்கப்படும் நிலையில், இங்கு அநீதியானதொரு சட்டம்தான் அரசியல் கைதிகள் விவகாரத்தில் நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# நுவரெலியாவில் தொடரும் சீரற்ற காலநிலை; பலர் பாதிப்பு

(ஹற்றன்)

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற கால நிலையால் பலர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி நேற்றுமுன் தினம் காலை வரை 59 குடும்பங்களைச் சேர்ந்த 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 42 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன், 28 குடும்பங்களைச் சேர்ந்த 121 பேர் 2 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடரும் மழை பெய்து வந்தால் மாவட்டத்துக்கான மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இரவில் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை-அலிசப்ரி

(கொழும்பு)

ஒரு இரவில் நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2005 இலிருந்து 2015 வரை நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது, 7.2 ஆக உயர்ந்து கொண்டுதான் இருந்தது.

2015 இலிருந்து 2019 வரையான தற்போதைய எதிர்க் கட்சியினரின் ஆட்சிக் காலத்தில்தான், 2.1 ஆக பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது.

14.5 பில்லியன் டொலரை இவர்கள் அன்று கடனாகப் பெற்றார்கள்.

அப்போது கொரோனா பிரச்சினையோ, ஈஸ்டர் தாக்குதல் சர்ச்சையோ, போராட்டங்களோ, ரஷ்யா- உக்ரைன் யுத்தமோ இடம்பெறவில்லை.

எனவே, நல்லாட்சி அரசாங்கத்தினரும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

பொய்யான கதைகளைக் கூறி, கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை இவர்கள் இடைநிறுத்தினார்கள்.

இடைநிறுத்தப்பட்டு ஒன்றரை வருடங்களின் பின்னர் தான் இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

எவ்வளவு முதலீடுகள் இதனால் பாதிக்கப்பட்டன?



எனவே, இங்கு யாரும் நல்லவர்கள் கிடையாது.

40, 50 வருடங்களாக நாட்டில் இருந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளின் விளைவாகத் தான் இன்று பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# இலகு ரயில் போக்குவரத்து திட்டம் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

ஜப்பானின் நிதியுதவியுடன் இலகு ரயில் போக்குவரத்து திட்டம் தொடர்பில் ஜப்பானுடன் இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, மீண்டும் முன்மொழியப்பட்ட இலகு ரயில் திட்டத்தை செயற்படுத்தும் வகையில் பொருத்தமான காலக்கெடுவை தயாரிப்பதற்காக ஜனாதிபதியினால் யோசனை முன்வைக்கப்பட்டது.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொழும்பு இலகு ரயில் போக்குவரத்துத் திட்டம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் ஜப்பானிய அரசாங்கத்திடம் மன்னிப்புக் கோரியிருந்தார்.

ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தை நிறுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக தீர்மானித்ததையடுத்து, இலங்கைக்கு 5,978 மில்லியன் இழப்பு ஏற்பட்டது.

கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலை குறைத்து, பயணிகளுக்கு சிறந்த பொது போக்குவரத்து வசதியை வழங்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உச்சத்தை தொட்ட மரக்கறிகளின் விலை

(கொழும்பு)

இலங்கையின் பல பகுதிகளிலும் பலத்த மழை காரணமாக மரக்கறிகளின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் 70 சதவீதம் உயர்ந்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையங்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான மரக்கறிகள் மொத்த விலையில் 300 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது.

மலையகப் பகுதிகளில் தற்போது கன மழை பெய்து வருவதால் சந்தையில் மரக்கறிகளின் வரத்து வெகுவாக குறைந்துள்ளது.

குறிப்பாக நேற்றுமுன்தினம் தம்புள்ளை சந்தைக்கு சுமார் 10 இலட்சம் கிலோ மரக்கறிகள் கிடைத்துள்ளதுடன் மொத்த கொள்வனவு செய்பவர்களின் வருகை சுமார் 50 வீதத்தால் குறைந்து மரக்கறிகளின் மொத்த விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் ஓகஸ்ட் முதல் வாரத்தில் மரக்கறிகளின் விலை இயல்பு நிலைக்குத் திரும்பும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

### சீரற்ற காலநிலை காரணமாக

# 14,000 இற்கு மேற்பட்ட மின்தடைகள் பதிவு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக இருநாட்களில் 14,000 திற்கும் அதிகமான மின் தடைகள் பதிவாகி உள்ளதாகவும், 50,000க்கும் மேற்பட்ட மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில்நேற்று உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். நுவரெலியா, கண்டி மாவட்டங்களிலும் நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளிலும் அதிகளவான வழக்குகள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2870

சுஜாதா




மதுமிதா




ரவி




நிலேஷ்




வைதேகி




கவிந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

### காவியத் தொடர் 223



இந்த விபரங்களைக் கேட்ட இளவரசி வந்தியத்தேவனை வியப்பினால் மலர்ந்த கண்களைக் கொண்டு பார்த்து, "வெற்றித் தெய்வமாகிய கொற்றவையின் கருணை இந்தச் சோழர் குலத்துக்குப் பரிபூரணமாக இருக்கிறது. ஆதையினாலேதான் இந்தச் சங்கடமான நிலைமையில் தங்களை எனக்கு உதவியாகத் தேவி அனுப்பி வைத்திருக்கிறாள்!" என்றாள்.

"அரசி! இன்னும் தாங்கள் எந்த விதப் பணியும் எனக்கு இடவில்லையே? என் பூரண ஆற்றலைக் காட்டக் கூடிய சமயம் இன்னும் கிட்டவில்லையே!" என்றான் வல்லவரையன்.

"அதைப் பற்றிக் கவலை வேண்டாம். இது காறும் தமக்கு நேர்ந்திருக்கும் அபாயங்கள் எல்லாம் ஒன்றுமில்லை என்று சொல்லக் கூடிய அளவு அபாயம் நிறைந்த வேலையைத் தரப் போகிறேன்!" என்றாள்.

வந்தியத்தேவன் உள்ளம் பொங்கி உடல் பூரித்து நின்றான். அந்தப் பெண்ணரசி இடும் பணியை நிறைவேற்றுவதற்காக ஏழு கடல்களைக் கடந்து செல்லவும், ஆயிரம் சிங்கங்களுடன் ஆயுதம் இன்றிப் போர் செய்யவும், மேரு பர்வதத்தின் உச்சியில் ஏறி விண்மீன்களைக் கையினால் பறித்து எடுத்துக் கொண்டு வரவும் அவன் சித்தமானான்.

அரண்மனை நந்தவனத்தின் மத்தியில் பளிங்கினால் ஆன வஸந்த மண்டபம் ஒன்று இருந்தது. அதை நோக்கிக் குந்தவை நடந்தாள். பட்டரும் வந்தியத்தேவனும் இளவரசியைத் தொடர்ந்து சென்றார்கள்.

மண்டபத்துக்குள்ளிருந்த மணி மாடம் ஒன்றிலிருந்து குந்தவை ஒரு சிறிய பனை ஓலைத் துணுக்கையும் தங்கப் பிடி அமைத்த எழுத்தாணியையும் எடுத்தாள். ஓலைத் துணுக்கில் பின் வருமாறு எழுதினாள்:

"பொன்னியின் செல்வா! இந்த ஓலை கண்டதும் உடனே புறப்பட்டு வரவும். விவரங்கள் இது கொண்டு வருகிறவர் சொல்லுவார். இவரைப் பூரணமாக நம்பலாம்."

இவ்விதம் எழுதி அடியில் ஆத்தி இலை போன்ற சிறிய சித்திரம் ஒன்று வரைந்தாள். ஓலையை வந்தியத்தேவன் கையில் கொடுப்பதற்காக நீட்டியவாறு, "சிறிதும் தாமதியாமல் இந்த ஓலையை எடுத்துக் கொண்டு ஈழ நாட்டுக்குச் செல்ல வேண்டும். இளவரசர் அருள்மொழிவர்மரிடம் கொடுத்து அவரைக் கையோடு அழைத்து வர வேண்டும்!" என்றாள்.

வந்தியத்தேவன் ஆனந்தத்தின் அலைகளினால் மோதப் பட்டுத் தத்தளித்தான். நெடு நாளாக அவன் கொண்டிருந்த மனோரதங்கள் இரண்டில் ஒன்று நிறைவேறி விட்டது. சோழர் குல விளக்கான இளைய பிராட்டியைச் சந்தித்தாகி விட்டது.

அவர் மூலமாகவே இரண்டாவது மனோரதமும் நிறைவேறப் போகிறது. இளவரசர் அருள் மொழிவர்மரைச் சந்திக்கும் பேறு கிடைக்கப் போகிறது.

"தேவி! என் மனத்துக்கு கந்த பணியையே தருகிறீர்கள். ஓலையை எடுத்துக் கொண்டு இப்போதே புறப்படுகிறேன்!" என்று சொல்லி ஓலையைப் பெற்றுக் கொள்வதற்காக வலக் கரத்தை நீட்டினான்.

குந்தவை ஓலையை அவனிடம் கொடுத்த போது காந்தள் மலரையொத்த அவளுடைய விரல்கள் வந்தியத் தேவனுடைய அதிர்ஷ்டக் கையைத் தொட்டன. அவனுடைய மெய் சிலிர்த்தது நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நன்றி கெட்ட சிங்கம்



முல்லை மலர் என்ற காட்டில் வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தான் மனிதன் ஒருவன்.

அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜினை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் மனிதன்.

"மனிதனே பயப்படாதே! இங்கேவா! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்ற குரல் கேட்டது. தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான் மனிதன். அங்கு ஒரு கூண்டில் சிங்கம் அடைப்பட்டு இருந்தது. வேட்டைகாரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

மனிதனைப் பார்த்த சிங்கம், "மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு... நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்," என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்றான் மனிதன். "மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டு தான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்று விடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கதவைத்திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்று நைசாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பி விட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவு தான்! நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட மனிதன், "சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேனே ... அதற்கு இது தானா நீ காட்டும் நன்றி" என்றான். "என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள்.

அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுதித்தறிய வேண்டாமா ?

முட்டாள் தனமான உன்செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது சிங்கம்.

"கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா ? உன்னை விடுவித்தற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல" என்றான் மனிதன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்கள் தண்டனை வழங்கும் காலம் நெருங்குகிறது!

நாளாந்தம் நடக்கின்ற விபத்து மரணங்களை அறியும்போது, நெஞ்சம் உறைந்து போகிறது.

அந்தளவுக்கு தினந்தோறும் மிகக் கொடுமையான விபத்துக்கள் நடந்தாகின்றன.

ஆம், நேற்று (05) மட்டும் வடபகுதியில் நடந்த வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இதில் பளை முள்ளிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 12 வயதுப் பாலகன் உயிரிழந்த சம்பவம் மிகப் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் தாய் தந்தைக்கு ஒரே பிள்ளையான சிறுவன் இராஜபாஸ்கரன் ஜதுசிகனின் மரணம் ஜீரணிக்க முடியாதது.

அந்தோ! கொடுமை எங்கள் மத்தியில் இருக்கக்கூடிய சாரத்தியத்தை என்னவென்று சொல்வது. வீதியில் பயணிப்பவர்களைப் பற்றி இம்மியும் கருசனை கொள்ளாமல், வாகனங்களை செலுத்துகின்ற கொடுமைக்கு குறைவே இல்லை.

உண்மை. வாகனங்களை எந்த வேகத்தில் செலுத்தினாலும் எப்படிச் செலுத்தினாலும் இலஞ்சம் அவர்களைக் காப்பாற்றி விடுகிறது.

இலஞ்சம் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்ற போக்குவரத்துப் பொலிஸார் செய்கின்ற கொடுமையை எவரும் கண்டு கொள்வதாக இல்லை.

தவிர, விபத்துச் சம்பவங்களால் ஏற்படுகின்ற மரணங்களுக்கான தண்டனைகள் எதுவுமில்லாமல் போக, விபத்துக்கள் சர்வ சாதாரணமாகிவிட்டன.

அதேவேளை சாரத்தியத்துக்குரிய அடிப்படைத் தகுதிகள் எதுவுமில்லாதவர்களுக்கு சாரத்திய அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற நடைமுறைகளும் அதற்குப் பின்னால் இருக்கக்கூடிய இலஞ்ச ஊழல்களும் போதிய பயிற்சியில்லாதவர்களை சாரதிகளாக்கி விட, அவர்கள் பெறுமதியான மனித உயிர்களைக் காவு கொள்கின்றனர்.

உண்மையில், விபத்து மரணங்கள் ஏற்படுகின்ற போது அந்த விபத்துக்கு யார் காரணமோ அவர் கொலைக் குற்றவாளியாகக் கருதப்பட்டு அவருக்கு மரண தண்டனை வழங்கப்படாத வரை விபத்துக்களை ஒரு போதும் குறைக்க முடியாது.

அதேநேரம் விபத்து மரணம் கொலையாகவும் அந்த விபத்தை ஏற்படுத்தியவர் கொலைக் குற்றவாளியாகவும் கருதப்படுவதான சட்டங்கள் அமுலுக்கு வந்தாக இன்னும் காலம் எடுக்கலாம்.

ஆனால் விபத்து மரணங்களை ஏற்படுத்துகின்ற சாரதிகளுக்குப் பொதுமக்கள் திரண்டு தண்டனை வழங்குகின்ற காலம் நெருங்குகிறது என்பதை உரியவர்கள் உணரவேண்டும்.

ஆம், விபத்துக்களின்போது இறப்பு ஏற்பட்டால், அந்த இறப்புக்கான முழுப் பொறுப்பும் குறித்த சாரதியாக – குறித்த வாகனமாக இருக்கும் பட்சத்தில், இறப்புக்கு ஈடான தண்டனையை பொதுமக்கள் வழங்கினால்தான் விபத்து தணியும் என்ற நிலைமை இருக்குமாயின், அது மிகப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்ற உண்மையைப் போக்குவரத்துப் பொலிஸார் புரிந்து கொள்வது அவசியம்.

# நாட்டின் வங்குரோத்துக்கு காரணமானவர்கள் பாராளுமன்ற குழுத் தலைவராக்கப்பட்டுள்ளனர்

## எதிர்க் கட்சித் தலைவர் ஆட்சேபம்

(கொழும்பு)

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணமானவர்கள் நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராக்கப்பட்டுள்ளனர் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆட்சேபம்தெரிவித்தார். பாராளுமன்றத்தில்நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்2019 ஆம்ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிற்பாடு ஒரு மாதம், அல்லது இரண்டுமூன்று மாதத்திற்குள் நாட்டின் பெரும் செல்வந்தர்களுக்கு 600 முதல் 700 பில்லியன் ரூபா வரையிலான முறிகள் வரிச்சலுகைகள் வழங்கப்பட்டன என்றும்,இதன் விளைவாக,

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்க வருவாய் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைந்ததாகவும்,இதனால்தான் பிட்ச்,மூடிஸ், ஸ்டாண்ட் அண்ட் புவர் போன்ற சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்கள் எமது நாட்டின் தரப்படுத்தலை தரமிறக்கியதாகவும்,இதனால் சர்வதேச மூலதனச் சந்தையை அணுகி குறைந்த வட்டியில் கடன்பெறும் வசதியை அரசாங்கம் இழந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தின் போது 600 முதல் 700 பில்லியன் வரை வரிச்சலுகை வழங்க ஏற்பாடு செய்தது யார்? அதற்கு கையை உயர்த்தி பேசியது யார்? முன்நின்றவர் யார்? என்பது ஒரு பிரச்சினைக்குரிய விடயம் என்றும்,

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்க வருவாய் 12 முதல் 8 சதவீதத்திற்குக் கீழே கொண்டு வந்த தரப்பினர் நாட்டின் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் தலைவராக செயற்படுவதாக இருந்தால் அது தவறு என்றும்,வங்குரோத்துக்கு வித்திட்டவர்களை மீண்டும் அக்குழுவிற்கு தலைவராக நியமிப்பது ஏற்புடையதல்ல என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

குறித்த வரிச்சலுகைகளை வழங்கியதே நாடு வங்குரோத்தாகுவதற்கு காரணம் என்றும், இதன் காரணமாகவே போராட்டம் கூட உருவாகி 69 இலட்சம் பேர்' நியமித்த ஜனாதிபதி கூட வெளியேற்றப்பட்டார்.

இந்த அவலத்திற்கான காரணங்கள் மற்றும் உண்மைகளை ஆராயும் குழுவின் தலைவர் பதவிக்கு இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களை நியமிப்பது நியாயமா என்பதை சபாநாயகர் பரிசீலிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார். (ம-7)

## பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்புகள் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தம்மை அரச புலனாய்வுத் துறையினர் என அடையாளப்படுத்தி "யார் துணைவேந்தராக வர வேண்டும்?" போன்ற தரவுகள் அவ் அநாமதேய அழைப்புகள் ஊடாக கோரப்படுவதாகவும் அமர்வு நெருங்கிவரும் நேரத்தில் இவ்வாறு அழைக்கப்படுவது நல்லதல்ல என பேரவை உறுப்பினர்கள் விசனம் தெரிவித்தனர். (ம-7)

## 1978ம் ஆண்டு யாப்பில் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்கும் எதுவித ஏற்பாடுகளுமில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலத்தை மேலும் 06 வருடங்கள் நீடிப்பதற்கான எந்தவித ஏற்பாடும்இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** காங்கேசன் துறை கடற்படை முகாம் ,துறைமுக ஆணையம்- காங்கேசன் துறை கடற்படைமுகாம் பிரதேசம் -காங்கேசன்துறை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் Palai wind plant ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆசிக்குளம், மறக்கறம்பளை- கணேசபுரம், சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடுவகிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மின்சார நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல்

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மின்சார நிலையத்திற்கு வருகை தந்த இருவர்அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பொன்னாலை பகுதியில் இருந்து மது போதை யில் வந்த இருவர், தமது வீட்டிற்கு சிவப்பு மின்சார பட்டியல் வந்தது என்றும் அதன் பின்னர் மின் துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கூறினர். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் குறித்த சிவப்பு மின்சார பட்டியலை உள்ளே காண்பிக்குமாறு கூறினார்.

அதனைத் தொடர்ந்து உள்ளே சென்ற இருவரும் அங்கு கடமையில் இருந்த உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டனர். இதன்போது அவ்விடத்திற்கு சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களை வெளிறேற்ற முயன்றபோது அவர்மீது சரமாரியாக தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-7,104)

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(கண்டி)

கண்டி - மடுல்கலை வட்டகலை பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த பகுதியில் பயிர்ச்செய்கை பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்சார வேலியில் சிக்குண்ட நிலையில் அவர்உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்தெனிய மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பன்விலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## பொருளியல் ஆசிரியர் லோகசிங்கத்தின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

பொருளியல் ஆசிரியர் மா. லோகசிங்கத்தின் மணிவிழா நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை S.S மண்டபத்தில் யாழ். பல்கலை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி சிரேஸ்ட பேராசிரியர் பா .நிமலதாசன் ,யாழ்.பல்கலை பொருளியல் துறை பேராசிரியர் சி. விஜயகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

11


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.




**இளநாகன் (கி.பி. 38-44)**

இளநாகன் கி.பி. முதலாம் நூற்றாண்டில், அநுராதபுரத்தை கி.பி. 38 - 44 வரை ஆட்சி செய்துவந்தான். இவன் இவனுடைய மாமியாரான சீவலிக்குப் பின் ஆட்சி ஏறியவன். இவனுக்குப் பின் இவனுடைய மகனான சந்ரமுக சிவன் ஆட்சி பீடம் ஏறினான்.

**சந்ரமுக சிவன் (கி.பி 44-52)**

சந்ரமுக சிவன் கி.பி. முதலாம் நூற்றாண்டில், கி.பி. 44 - 52 வரை அநுராதபுரத்தை ஆட்சி செய்து வந்தான். இவனது தந்தையான இளநாகனின் பின் இவன் ஆட்சி பீடம் ஏறினான். இவனின் பின் இவனது உடன் பிறப்பான யஸ்ஸலாலக தீசன் ஆட்சி பீடம் ஏறினான்.

**யசலாலதீசன் (கி.பி.52-.60)**

யசலாலதீசன் என்பவன் கி.பி முதலாம் நூற்றாண்டில் அநுராதபுர இராச்சியத்தை ஆண்ட மன்னன் ஆவான். இவனது ஆட்சிக் காலம் கி.பி.52 முதல் கி.பி.60 வரை நீடித்திருந்தது. இவனது தந்தை இளநாகன் ஆவான். இவன் தனது உடன் பிறப்பான சந்ரமுக சிவன் என்பவனிடம் இருந்து ஆட்சியைப் பெற்றான். இவனுக்குப் பின்னர் சுபகராஜன் என்பவன் ஆட்சி அமைத்தான்.

**சுபகராஜன் (கி.பி.60 - 66)**

சுபகராஜன் அல்லது சுபா கி.பி. முதலாம் நூற்றாண்டில், 60 - 66 வரைஅநுராதபுரத்தை ஆட்சி செய்து வந்தான். இவன் யஸ்ஸலாலக தீசன் மன்னனின் பின்னர் ஆட்சிபீடம் ஏறியவன். இவனுடன் விஜயவம்சம் நிறைவுற்றது. இவன் யஸ்ஸலாலகதீசன் மன்னனின் மண்டபக் காவலாளியாவான். இவனையடுத்து

**முதலாம் இலம்பகர்ணவம்ச மன்னனான வசபன் ஆட்சி பீடம் ஏறினான்.**

அநுராதபுரக் கால அரசியல் வரலாற்றை கற்கையில் வசப மன்னன் ஆட்சிக்கு வந்தமை (கி.பி. 67) இன்னொரு புதிய அரச பரம்பரையை உருவாக்கியமையால் மிக முக்கிய இடம் வகிக்கின்றது.

**இலம்பகர்ணவம்சம்**

அநுராதபுரக்கால அரசியல் வரலாற்றை கற்கையில் வசப மன்னன் ஆட்சிக்கு வந்தமை இன்னொரு புதிய அரச பரம்பரையை உருவாக்கியமையால் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. வசபமன்னன் இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளனாவான். வசப மன்னனுடன் ஆரம்பமான இலம்பகர்ண வம்சம் 370 வருடங்களுக்கு அதிகமாக நின்று நிலைத்தது.

**வசபன் (கி.பி. 66-110)**

வசபன் என்பவன் இலங்கையின் அநுராதபுரத்தை ஆண்ட மன்னனாவான். இவன் இலங்கையில் பெரிய அளவில் நீர்ப்பாசனத்திற்காக குளங்களை ஏற்படுத்திய அரசர்களின் முன்னோடியாகக் கருதப்படுகிறான். நீர்ப்பாசன வளர்ச்சிக்கு மட்டுமன்றி பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியுள்ளான். சுபகராஜனைக் கொன்றதன் பின்னர் ஆட்சியேறிய இவன் இலங்கை வரலாற்றிலேயே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தினான். அதாவது ஒரு புதிய வம்சம் ஆட்சிக்கு வந்தது.

இவன் இலம்பகர்ண வம்சத்தைக் சேர்ந்தவன். இலங்கையில் வட பகுதியில் இராணுவத் தளபதியாக இருந்த தனது மாமனாரின் கீழ் வசபன் வேலை செய்து வந்தான். இக் காலத்தின் சுபகராஜ மன்னனே நாட்டை ஆண்டு வந்தான். சுபகராஜனை "வசபன்" எனும் பெயர் கொண்டவன் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றுவான் என சோதிடம் பார்பவர்கள் கூறினர். இதன் பொருட்டு "வசபன்" எனும் பெயர் கொண்ட அனைவரையும் கொன்று விடுமாறு மன்னன் உத்தரவிட்டான். எனினும் வசபனின் மாமனார் அவனை இரகசியமாக தனது இராணுவப்படையில் சேர்த்துக் கொண்டான். மாமனாரது மனைவியான பொத்த, சுபகராஜனின் கட்டளை பற்றி எடுத்துக் கூறி கவனமாக மறைந்து வாழுமாறு அறிவுரையும் கூறினாள்.

இராணுவத்தில் சேர்ந்து கொண்ட வசபன் வளர்ச்சி கண்டு மன்னன் மீது படையெடுப்பு மேற்கொண்டான். இப்படையெடுப்பினால் தனது மாமனையும் சுபகராஜனையும் கொன்று கி.பி. 66 ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். தான் இறக்கும் வரையிலும் (கி.பி. 110) 44 ஆண்டுகளாக வசபன் ஆட்சியில் இருந்தான். இவனிலிருந்து புதிதாக முதலாம் லம்பகர்ண வம்சம் (66-436) ஆரம்பமானது.

இவன் மகாவிலச்சிய, ஏரு, மாகம் வாவி, நோச்சி பொத்தன, கிரிவட்டுன போன்ற 11 குளங்களையும் எலகரக்கால்வாய் உட்பட12 கால்வாய்களையும் அமைத்ததாக மகாவம்சம் கூறுகிறது. இவற்றில் முக்கியமானது எலகரக்கால்வாய் ஆகும். ஏனெனில் இதன் நீளம் 30 மைல்கள் (48கி.மீ) ஆகும். அம்பன் எனும் ஆற்றில் அணை ஒன்றைக் கட்டிய தன் மூலம் இக்கால்வாய் உருவாக்கப்பட்டது. இக்கால்வாய் வேளாண்மை செய்வதற்கான நீரைப் பெற்றுக் கொள்ள பயன்படுத்தப் பட்டது. இப்படியான பல குளங்களையும் கால்வாய்களையும் வசபன் கட்டியமையால் இவன் பாரிய நீரவடிகால் தொகுதி ஒன்றை நாட்டினில் அமைத்ததாகக் கூறப்படுகின்றது.

பௌத்த மதத்திற்காகவும் வசபன் சேவையாற்றியுள்ளான். வட்டதாகே, தூபாராமய போன்றவற்றை புனர் நிர்மாணம் செய்துள்ளான்.

**வங்கனாசிகதீசன் (கி.பி.110-113)**

வங்கனாசிகதீசன் அல்லது வங்கநாசிகதீசன் என அறியப்பட்டவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னன். இவன் மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆனாலும், இவனது ஆட்சிக் காலம் கிபி 106-109 என்றும், கிபி 110-113 என்றும், பலவாறாகக் கூறப்படுகிறது. இவனது தந்தையான வசபன் என்பவனின் இறப்புக்குப் பின்னர் இவன் அநுராதபுரத்தின் ஆட்சியில் அமர்ந்தான்.

வங்கனாசிகதீசன் தனது மூன்றாண்டு கால ஆட்சிக்குப் பின்னர் இறந்த போது கஜபாகுக் காமினி அல்லது முதலாம் கஜபாகு எனப் பொதுவாக அறியப்பட்ட அவனது மகன் அநுராதபுரத்தின் அரியணையில் அமர்ந்தான்.

**முதலாம் கஜபாகு (கி.பி. 113-135)**

வங்கனாசிக தீசனின் மகனான முதலாம் கஜபாகு என்பவர் ஒரு இலங்கை அரசன். இவன், சேர அரசன் செங்குட்டுவன் காலத்தவன் ஆவான். செங்குட்டுவன் கண்ணகிக்கு கோவில் கட்டியபோது, அந்த விழாவில் கஜபாகு மன்னர் கலந்து கொண்டதாகவும், அப்போது கண்ணகியின் புகழை இலங்கையிலும் பரப்பபோவதாகவும் கூறியுள்ளான்.

**மகல்லக்க நாகன்(கி.பி. 135-141)**

மகல்லக்க நாகன் கி.பி. முதலாம் நூற்றாண்டில், அநுராதபுரத்தை ஆட்சி செய்து வந்தான். இவன் முதலாம் இலம்பகர்ண வம்சத்தைச் சேர்ந்தவன். இவன் கி.பி. 135 ஆம் ஆண்டில் இருந்து141 ஆம் ஆண்டு வரை ஆட்சி பீடத்தில் இருந்தான். இவனுக்கு முன் இவனது தந்தையான முதலாம் கஜபாகு ஆட்சியில் இருந்தான். இவனின் பின் இவனது மகன் பதிகதீசன் ஆட்சி பீடம் ஏறினான்.

**பதிகதீசன் (கி.பி. 141-165)**

பதிகதீசன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், அநுராதபுரத்தை கி.பி. 141 தொடக்கம் 165 வரை ஆட்சி செய்து வந்தான். இவனின் முன்பு இவனின் தந்தையான மகல்லக்க நாகன் ஆட்சியில் இருந்தான். இவனின் பின் இவனது உடன் பிறப்பான கனித்ததீசன் ஆட்சிபீடம் ஏறினான்.

**கனித்ததீசன் (கி.பி. 165 - 193)**

கனித்ததீசன் கிபி இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னன். இவன் 18 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆனால், இது உண்மையில் 28 ஆண்டுகள் என்பது சில ஆய்வாளர்களது கருத்து.

இவனது ஆட்சிக் காலம் கி.பி 161-179 என்றும், கிபி 165 - 193 என்றும், கி.பி 155-183 என்றும், பலவாறாகக் கூறப்படுகிறது. இவனது தமையனான பத்திகதீசன் என்பவனைத் தொடர்ந்து இவன் அநுராதபுரத்தின் ஆட்சியில் அமர்ந்தான்.

அம்பத்தலை, என்னும் இடத்திலும் நாக தீபத்திலும் பௌத்த கட்டிடங்களை இவன் அமைத்ததாகத் தெரிகிறது. இவனது ஆட்சிக் காலத்தின் பின் சூளநாகன் அல்லது குச்சநாகன் என அறியப்பட்ட இவனது மகன் அரசனானான்.

**குச்சநாகன் (கி.பி. 193-195)**

குச்சநாகன் அல்லது சூளநாகன் என்பவன் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னன். இவன் 2 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆனாலும், இவனது ஆட்சிக் காலம் கி.பி 179-181 என்றும், கி.பி 193-195 என்றும், கி.பி 183-185 என்றும் பலவாறாகக் கூறப்படுகிறது. இவனது தந்தையான கனித்த தீசன் என்பவனைத் தொடர்ந்து இவன் அநுராதபுரத்தின் ஆட்சியில் அமர்ந்தான்.

இவனது ஆட்சி குறுகியகாலமே இருந்ததால் இக்கால நிகழ்வுகள் குறித்து மகாவம்சம் விரிவாக எதுவும் கூறவில்லை. இவனது இரண்டு ஆண்டுகால ஆட்சியின் முடிவில் குட்ட நாகன் அல்லது குஞ்சநாகன் என அறியப்பட்ட இவனது தம்பி இவனைக் கொன்று விட்டு அரசனானான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாஃப் எரிவாயு...

3,690 ரூபாய்க்கு விற்பனை செய்யப் படவுள்ளது.

இதேவேளை, 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 120 ரூபாயினால் குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சிமெந்து...

விலை, 300 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இன்று முதல் குறித்த விலை அமுலாகவுள்ளது.

உற்பத்தியாளர்கள் இந்த விலை குறைப்புக்கு இணங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2,600 ரூபாய்க்கு விற்பனையாகும் சிமெந்து மூடை ஒன்றின் விலை, 2,300 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதென அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மீற்றர் பொருத்...

நேற்று ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரத்தின் தலைமையில் நேற்று யாழிலுள்ள முச்சக்கரவண்டிகளிற்கு டக்சி மீற்றர் பொருத்துவதுடன், அவற்றின் ஒழுங்கமைப்புக்களை சரியாக மேற்கொள்ளுதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இவ்வாறான, கலந்துரையாடல் இதற்கு முன்னரும் இரண்டு மூன்று தடவைகள் இடம்பெற்றுள்ள போதிலும், நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் முக்கியமான சில முடிவுகளை எடுக்கக்கூடியதாக இருந்தது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் டக்சி மீற்றர் பொருத்தப்பட வேண்டிய அனைத்து முச்சக்கரவண்டிகளிற்கும் டக்சி மீற்றரை பொருத்தி 20, 21, 22 ஆகிய திகதிகளில் பொலிஸாரால் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படும்.

அது ஒட்டப்பட்ட பின்னரே செப்டெம்பர் மாதத்தில் இங்குள்ள தரிப்பு நிலையங்களில் நின்று முச்சக்கரவண்டிகளை செலுத்துவதற்குரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

டக்சி மீற்றர் பொருத்தப்படாத மற்றும் பொலிஸ் ஸ்ரிக்கர் இல்லாதும் ஓடப்படும் முச்சக்கரவண்டிகளை பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன் அதன் பின்னர் சட்ட நடவடிக்கை எடுத்தல் என்ற தீர்மானத்தை எட்டியுள்ளோம்.

ஆகவே, இது குறித்து இன்று முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அந்த வகையில் இன்று முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்திற்கு சென்று இது தொடர்பாக ஆலோசனை வழங்கவுள்ளோம்.

அதனையடுத்து, 20ஆம் திகதி முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் செயற்பாடு அமுலுக்கு வரும் எனவும் தெரிவித்தார். (ம-7)

## சபாநாயகருக்கு...

சபாநாயகரின் நடத்தைக்கு எதிராக பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம் மற்றும் பொதுநலவாய பாராளுமன்ற சங்கம் என்பவற்றுக்கு எதிர்க்கட்சியினரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலேயே குறித்த கையொப்பமிடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாராளுமன்றக் குழுக் கூட்டங்களில் எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்கவோ கேள்விகளை எழுப்பவோ முடியாது என சபாநாயகர் அறிவித்த நிலையில் குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முல்லையில்...

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி காணப்பட்ட இடத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணியின்போது 13 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த மனித புதைகுழி தொடர்பில் எதிர்வரும் 13ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அகழ்வுப் பணியுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் அமைப்புக்களுடன் விசேட கலந்துரையாடல் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்தே அகழ்வுப்பணியை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்றுக் காலை 10.00 மணியளவில் தொடங்கிய அகழ்வுப்பணி, மாலை 3.30 மணி வரையில் இடம்பெற்றது.

இவ்வாறு இடம்பெற்ற அகழ்வுப் பணியின் பிரகாரம் 13 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், அவை தடயவியல் பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா, தடயவியல் பொலிஸார் உள்ளிட்டவர்களால் இந்த அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகப் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரது கண்காணிப்புக்களுக்கு மத்தியில் நேற்று அகழ்வுப்பணி இடம்பெற்றது.

கடந்த 29.06.2023 அன்று மாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தைத் தோண்டிய போது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

இதனை தொடர்ந்து கொக்கிளாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கவனத்திற்கு இந்த விவகாரம் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக 30.06.2023 அன்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது குறித்த மனித எச்சங்கள் காணப்படுகின்ற பகுதியில் ஜூலை 6 ஆம் திகதி (நேற்று) அகழ்வுப்பணியை முன்னெடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் மனிதஎச்சங்களை அழிவடையாமல் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிஸாருக்கு நீதிபதி பணிப்புரை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7285)

## தமிழீழம்...

தமிழ் மக்களின் நகைகள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு சொந்தமான நிதி தொடர்பாக எந்தவொரு அரசும் பொறுப்புக் கூறாது ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பலர் உகண்டா உள்ளிட்ட வெளிநாடுகளில் முதலீடுகளை செய்துள்ளார்கள்.

இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தமிழ் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வை கோரவில்லை என்ற கருத்தை மேற்கோள் காட்டி பேசுகின்றபோதே அவர் இவ்வாறு கூறினார். தமிழர்களாகிய நாங்கள் அதிகாரப் பகிர்வை கோரவில்லை. அப்படியானால் நீங்கள் தமிழீழம் தருகின்றீர்களா? என கேள்வியெழுப்பினார். (ம-7)

## முல்லை அரச...

லைத்தீவு அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2023.07.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1197
N 09 13 16 26 N

கொவிசெத
திகதி 2023.07.06
சீட்டிழுப்பு இலக்கம் 3409
N 06 48 52 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1515
O 23 25 52 58 78

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.06
சீட்டிழுப்பு இலக்கம் 476
கும்பம் 09 47 49 58 கும்பம்

மஹஜன சம்பத
திகதி 2023/07/06
சீட்டிழுப்பு இலக்கம் 5167
M 0 6 4 4 9 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2141
வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.07.06
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 46 47 75 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,537,084.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 03 41 50 63 Q
DLB

சனிதா
திகதி 2023.07.06 வெற்றி வாரம் 4302 வர்ணம் சிவப்பு
13 15 50 64 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,103,208.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 29 49 67 70 K
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3853
வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.06
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 24 32 33 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,247,202/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 03 06 27 57
DLB

கப்ருக
திகதி 2023.07.06 வெற்றி வாரம் 1317
D 02 03 20 27 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 413,695,184.20
"இரண்டாவது வாய்ப்பு" வெற்றி இலக்கங்கள் 15 41 67 68 Y
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 608 திகதி 2023-07-06 வர்ணம் நீலம்
N 10 28 65 09
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 21,458,224.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 1967
சீட்டிழுப்பு திகதி: 2023.07.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,376,046/-
16 35 49 67 B
"இரண்டாம் வரம்" 02 27 47 52 K
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 28 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு: ஜெயம் (16213)

077 814 7389, 077 986 5457




# பாம்பு தீண்டியதில் இளைஞன் உயிரிழப்பு

## முல்லையில் சம்பவம்

முல்லைத்தீவு முள்ளியவளை - முறிப்பு பகுதியில் பாம்பு தீண்டியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இச்சம்வம் இடம்பெற்றுள்ளது. இதில் முள்ளியவளை - முறிப்பு பகுதியியை சேர்ந்த மகேந்திரன் கஜன் என்ற 27 வயது இளைஞனே உயிரிழந்தவர் ஆவார். (ம-7)

# வங்கிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு) மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் இதன் நன்மைகளை பொது மக்களுக்கு பெற்றுத் தராத வங்கிகள் தொடர்பில் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் (SLFR) ஆகியவற்றை குறைக்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. (ம-7)


## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழுங்கப்படும்

076 573 4507 (16291)

## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2025

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் நாளை 08.07.2023(சனி) காலை 8 மணி

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

நிர்வாகம் : 077 011 9434 (C-6877)


# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 1941 - 10 - 11

இறைவன் அடியில் 2023 - 07 - 04

## திருமதி சந்திரமணிதேவி முத்துலிங்கம்

( தேவி - ஓய்வுபெற்ற அரச தாதி உத்தியோகத்தர் )

யாழ். குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரமணிதேவி அவர்கள் செவ்வாய்க்கிழமை (04.07.2023) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல சித்த வைத்தியர் அமரர் திரு.தியாகராசா(இணுவில் பரிகாரியார்) - அமரர் திருமதி தங்கம்மா தம்பதியரின் ஆசை மகளும் காலஞ்சென்றவர்களான இணுவில் சின்னையா - தங்கச்சியம்மா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற திரு.முத்துலிங்கம்(ஓய்வு பெற்ற கமநல சேவைத் திணைக்களப் பிராந்தியப் பணிப்பாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும் திரு.தட்சணாமூர்த்தி(நோர்வே) அவர்களின் அன்புச் சகோதரியும் கமலாம்பிகை(நோர்வே) அவர்களின் அன்பு மைத்துனியும் நடன ஆசிரியர் திருமதி நிறைஞ்சனா சுரேஸ்குமார்(லண்டன்), திரு.விஜயராகவன்(கணக்காளர்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திரு.க.சுரேஸ்குமார்(கணக்களார்-லண்டன்), வைத்தியகலாநிதி (Dr)திருமதி.வி.சஜிதா(லண்டன்), கிருபாலினி(நோர்வே), ஜனனி (நோர்வே), சயந்தினி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராகவீணா(லண்டன்), கைலாஷ்(லண்டன்), அவினாஷ்(லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 07.07.2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை முன் ஒழுங்கை, தெல்லிப்பழை.

நிறைஞ்சனா(லண்டன்) +447703193949
விஜயராகவன்(லண்டன்): +447456939024

தகவல்:- குடும்பத்தினர் (16210)


## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16033)

T.P:077 544 8503

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (16215)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## A/L CLASSES

பல நூற்றுக் கணக்கான மாணவர்களை அதி உயர் பெறுபேறுகளுக்கு வழிகாட்டிய பிரபல ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ். மண்ணில் மீண்டும் ஆரம்பமாகின்றது.

CHEMISTRY

யாழ்.,கொழும்பு பிரபல ஆசிரியர்

Mr.D.SIVASOTHY(BSc,PGDE)

A/L 2023- Physical Chemistry
A/L 2023- A/L Day Classes (கருமிரிவினருக்கும்)
Paper classes (துரித மீட்டலுடன்)

A/L 2024- / Organic / Inorganic

A/L 2025- புதிய பிரிவு

மூன்று இடங்களில் ஆரம்பமாகிறது

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்.சுன்னாகம் இரு இடத்திலும் - 09.07.2023 ஞாயிறு

BARATHY - சித்தங்கேணியில் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

Note -மாணவர்களின் வசதிக்கு ஏற்ப நேரம் தீர்மானிக்கப்படும். குறைந்தளவுகட்டணம் அறவிடப்படும் (C-6878)

077 376 3511

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- சுன்னாகம் – சாவகச்சேரி அரச தனியார் பேரூந்துகள் செல்லும் வீதி
- பிரதான காபற் வீதி முகப்புடன் மூன்று இலட்சம் ரூபாய் 300,000/= பின் துண்டு காணிகள் ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் 150,000/=
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16214)

076 826 0354
076 057 0354


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. ..., பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org